# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கே. ஜயதிலக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, சனவரி மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கே. ஜயதிலக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 21/2005*

**கே. ஜயதிலக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"கே. ஜயதிலக்க மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கே. ஜயதிலக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கே. ஜயதிலக்க மன்றத்தின் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கே. ஜயதிலக்க மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக கே. ஜயதிலக்க மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) மொழி மற்றும் இலக்கிய அபிவிருத்திக்கான வழிமுறைகளை எடுத்தல் ;

(ஆ) கே. ஜயதிலக்க அவர்களின் ஆக்கங்கள் மற்றும் இலக்கியப் படைப்புக்களைப் பேணிக்காத்து வெளியிடுவதும் வருங்காலச் சந்ததியினருக்கு அவற்றை மரபுரிமைச் செல்வமாக விட்டுச் செல்லுதலும் ;

(இ) கே. ஜயதிலக்க அவர்களின் பிறப்பிடத்தை மையமாகக் கொண்டு ஆக்கபூர்வமானதும் பாரம்பரியமானதுமான இலக்கிய செயற்பாடுகளுக்கான நிலையமொன்றைத் தாபித்தலும் இலக்கிய கருத்தரங்குகள் மற்றும் வேலைக் களங்களையும் நடாத்துதலும் ;

(ஈ) புதிய படைப்பாக்க சாத்திரிய முறையான இலக்கியங்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளோரை ஊக்குவிப்பதற்கான கருத்திட்டத்தை ஆரம்பித்தலும் ;

(உ) கே. ஜயதிலக்க அவர்களின் கிராமத்தையும் அதன் சூழலிலும் வாழும் மக்களின் கலைத் திறமைகளை அதிகரிக்கும் நோக்குடனான நடபடிகளை எடுத்தல் ;

(ஊ) இச்செயற்பாடுகளை தீவின் ஏனைய பிரதேசங்களுக்கு நீடித்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதரீதியான, கலாசார ரீதியான மற்றும் சமூக சேவைகளுக்கு ஆதரவளித்தல் ; அத்துடன்

(ஏ) அவ்வாறு செய்வது அவசியமானதென அது கருதும், எத்தகையதுமான சமூக சேவை ஒழுங்கமைப்புடனான மற்றும் மத ரீதியான அத்துடன் கலாசார ரீதியான ஒழுங்கமைப்புடனான கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம், தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், தொழிற்படுத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதியை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலானது இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட வேண்டிய விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவ்விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான பதவி தாங்குநர்களையும் அத்தகைய வேறு உறுப்பினர்களையும் கொண்ட முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தபானத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை

கொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், உறுப்பினர்களை மீளப் பெறுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவும், முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் பணிகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனக் கூட்டங்களில் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதே போன்ற கூட்டமொன்றில் அதே முறையில் அவை மாற்றப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

*(2)* இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன்மீது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தினால் காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் விதிகளுக்கமைந்தவராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** *(1)* கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக இதுவரை கிடைத்த அல்லது இதன்பின்னர் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**8**. *(1)* கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்களை கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.*

*(2)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், முகாமைச் சபையில் நியமிக் கப்பட்ட தகைமைபெற்றதொரு கணக்காய்வாளரினால் கணக் காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*(3)* இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது :—

*(அ)* இலங்கையில் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக் காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவ கத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவரான ஆள் ஒருவர் என்று பொருளா கும் ; அல்லது

*(ஆ)* எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொருவதி வுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக் காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவே அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராக வும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப்பொருளாகும்.

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் பொறுப்பு விடுவித்தலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், வரும்படி களும் ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியவனவும் இச்சட் டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப் படுதலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்பட வுள்ளவுமான கடன்கள்.*

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக் கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதன மெல்லாம் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடனும், கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாப னத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவி வகிப்பவர்கள் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகா தென்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல், எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருப்ப தான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப் பின், அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால், கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும், அத்துடன் எந்தக் கழகம் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் கழகமாக அல்லது கழகங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அந்தக் கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படு வதற்கு முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்